யா/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின்
பழைய மாணவிகள் சங்கம், யாழ்ப்பாணம்.

பெருமையுடன் அளிக்கும்

# "ஓசை"




வேம்படியின் ஆவணக் களஞ்சியம்

NOOLAHAM
FOUNDATION

யா/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின்

பழைய மாணவிகள் சங்கம், யாழ்ப்பாணம்

பெருமையுடன் அளிக்கும்

# ஓசை

NOOLAHAM

FOUNDATION

# நோக்கம்

- யாழ்/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையினால் வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படுகின்ற பிரசுரங்கள், இதழ்கள் மற்றும் எழுத்தாவணங்களை எண்ணிம ஆவணப்படுத்தலும் அவற்றை அழியாவண்ணம் பாதுகாத்து எதிர்கால சந்ததியினரின் வளர்ச்சிக்குப் பங்களித்தலும்.

- வெளியிடப்பட்ட மற்றும் வெளியிடப்படுகின்ற பிரசுரங்கள், இதழ்கள் மற்றும் எழுத்தாவணங்களை எண்ணிம வடிவில் இணையம் மூலம் உலகெங்கும் பரந்து வாழும் தமிழ் சமூகம் இலகுவில் பெற்றக் கொள்ள வழி வகுத்தலும்.

- யாழ்/வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் மீதான ஆய்வு களுக்குத்தேவையான உசாத்துணை வளங்களை வழங்குவதன் மூலம் வலுவூட்டுதல்.

- யாழ்/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் மேன்மை மிகு வரலாற்றையும் மாணவச் செல்வங்களின் திறமைகளையும் ஆவணப் படுத்தும் நல்நோக்குடன் வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் பழைய மாணவிகள் சங்க யாழ்ப்பாணக் கிளையினரும் நூலக நிறுவனத்துடன் இணைந்து முதன் முதலாக இவ்விதழினை வெளியிடுகின்றனர். மேலும் வருங்காலங்களில் மாணவச் செல்வங் களினால் உருவாக்கப்படும் பொக்கிஷங்கள் அழிக்க முடியாவண்ணம் ஆவணப்படுத்தப்பட்டு பாதுகாக்கப்படும் என்பதில் எதுவித ஐயமு மில்லை.


நூல்

முதற்பதிப்பு : *16.03.2014*

தொகுப்பு : நூலக நிறுவனம்

வெளியீடு : பழைய மாணவிகள் சங்கம், யாழ்ப்பாணம்.
யா/ வேம்படி மகளிர் கல்லூரி.

வலைத்தளம் : www.noolaham.org

# அதிபரின் வாழ்த்துச்செய்தி

வேம்படி மகளிர் கல்லூரியின் அதிபர் என்ற வகையில் எமது பாடசாலையின் 175ஆவது நிறைவான சேவையை நினைவு கூர்ந்து, எமது பழைய மாணவர் சங்கத்தால் வெளியிடப்படும் "ஓசை" எண்ணிம தட்டின் நூல் வெளியீட்டிற்கு இச்செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

நூல்களை எண்ணிமப்படுத்தலும் சர்வதேச வலையமைப்பில் இணைத்துக் கொள்ளலும் இன்றைய காலத்தின் தேவையாகும். இவ்வகையில் எமது பாடசாலையால் வெளியிடப்பட்ட, கிடைத்த அளவில் சகல நூல்களையும் எண்ணிமப் படுத்தியுள்ள பழைய மாணவர் சங்கத்திற்கு எனது பாராட்டுக்கள்.

இத்தகைய செயற்பாட்டை நிஜமாக்கிய நூலக நிறுவனத்தினருக்கும், மிகச் சிறப்பான வகையில் நடைமுறைப்படுத்திய யாழ். பிராந்திய தொடர்பாளர் மற்றும் யாழ். நூலக நிறுவனத்தினருக்கும், நூல்களை வழங்கிய சகலருக்கும் எனது நன்றிகள்.

எமது வருங்கால சந்ததியினர் இச் செயற்பாட்டின் உச்சப் பயன்பாட்டை அடைவதுடன், இதுபோன்ற நல்ல செயற்பாடுகளை மேலும் தொடர வேண்டும் என வாழ்த்துகின்றேன்.

**திருமதி வேணுகா சண்முகரட்ணம்,**
அதிபர்.

# இயக்குநரின் வாழ்த்துச்செய்தி

நூற்றுஎழுபத்துஐந்து ஆண்டுகள் வரலாற்றைக் கொண்ட யாழ்/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை தமிழர்களின் வரலாற்றில் மிகவும் முக்கியமானது. இக்கல்லூரியின் நிழலிலே கல்விகற்று உலகம் பூராகவும் சமூகத்தில் மதிப்புடையோராக இன்று பலர் திகழ்கின் றார்கள். அந்தவகையில் இக்கல்லூரி எமது சமூகத்துக்கு ஆற்றிய பங்களிப்பு அளப்பெரியது.

யாழ்/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையின் வரலாற்றை அது கடந்து வந்த பாதையை ஆவணப்படுத்துவது என்பது எமது இன்றைய தலையாய கடமை ஆகும். இந்தவகையில் இலங்கை தமிழ்பேசும் சமூகங்கள் சார்ந்து ஆவணப்படுத்தலில் ஈடுபட்டுவரும் நூலக நிறுவனத்தினராகிய நாம் இக்கல்லூரியின் ஆவணப்படுத்தல் முயற்சியில் பங்காளராக இணைந்து கொள்வதில் பெருமிதம் கொள்கின்றோம்.

நூலக நிறுவனமும் யாழ் /வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை பழைய மாணவிகள் சங்க யாழ்ப்பாணக் கிளையினரும் இணைந்து மேற்கொள்ளும் இம்முயற்சி எமது சமூகத்தின் வரலாற்றை உலகறியச் செய்வதுடன், அடுத்த சந்ததிக்கும் கொண்டு செல்லும் என்பதில் எந்தவித ஐயமும் இல்லை. இவ்ஆவணப்படுத்தல் முயற்சியானது கல்லூரியின் வரலாற்றிலே இன்னுமொருபடி வளர்ச்சியாகக் கருதுவதுடன் இம்முயற்சிக்கு பங்களித்த அனைவருக்கும் நூலக நிறுவனம் சார்பில் எனது வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்.

நன்றி

**சேரன் சிவானந்தமூர்த்தி,**
இயக்குநர்.
நூலக நிறுவனம்.

# பழைய மாணவிகள் சங்கத் தலைவியின் வாழ்த்துச்செய்தி

வேம்படி மகளிர் கல்லூரியின் பழைய மாணவிகள் சங்கத் தலைவி என்ற வகையில் எமது தாயின் 175ஆவது நிறைவான சேவையை நினைவு கூர்ந்து, எமது சங்கத்தால் வெளியிடப்படும் "ஓசை" எண்ணிம தட்டின் நூல் வெளியீட்டிற்கு இச் செய்தியை வழங்குவதில் பெருமகிழ்வு அடைகின்றேன்.

இன்றைய காலகட்டத்தில் நூல்களை எண்ணிமப்படுத்தலும் சர்வதேச வலையமைப்பில் இணைத்துக் கொள்ளலும் மிக முக்கியமான தேவையாகும். இவ்வகையில் எமது பாடசாலையால் வெளியிடப் பட்ட, எமக்குக் கிடைத்த சகல நூல்களையும் எண்ணிமப்படுத்தியுள் ளோம்.

இம்மகத்தான சேவையின் எண்ணக்கரு நூலகம் நிறுவன யாழ். தொடர்பாடல் உத்தியோகத்தர் திரு.சேரன் அவர்களால் எமக்கு விதைக்கப்பட்டு, நூலக நிறுவனத்தினரின் பாரிய பங்களிப்புடன் இன்று பயன் தரும் வேப்ப விருட்சமாக, "ஓசை" என்ற பெயரில் வெளியிடப் படுகின்றது.

எமது செயற்பாட்டுக்கு அனுமதி அளித்த அதிபருக்கும், மிகச் சிறப்பான வகையில் நடைமுறைப்படுத்திய நூலக நிறுவனத்தினருக்கும், நூல்களை வழங்கிய சகலருக்கும் எமது நன்றிகள்.

இதன்மூலம் எமது வருங்கால சந்ததியினரும் பயன் அடைவது டன், இவற்றில் அடங்காத எமது பாடசாலையால் வெளியிடப்பட்ட வேறு நூல்கள் யாரிடமாவது இருக்கும் பட்சத்தில் கடனாகத் தந்துதவும் பட்சத்தில் அடுத்த வெளியீட்டில் இணைத்து பலர் பயன்பெற உதவ முடியும்.

**திருமதி ஸ்ரீரஞ்சினி ஆனந்தக்குமாரசாமி,**
*தலைவி, பழைய மாணவிகள் சங்கம், யாழ்ப்பாணம்.*

# தொகுப்புரை

காலவோட்டத்தில் பல விடயங்கள் அருகிச் செல்கின்றது. இதனால் எம் சமூகத்தினரால் பல விடயங்களை அறிய முடியவில்லை. இவற்றை நிவர்த்தி செய்யும் நோக்கில் நூலக நிறுவனம் தமிழ் பேசும் சமூகங்களின் தகவல் வளங்களையும் அறிவுச் சேகரங்களையும் ஆவணப் படுத்தி பேணிப்பாதுகாத்து அனைவருக்கும் கிடைக்கச் செய்யும் இலக்குடன் இயங்கி வருகின்றது. அந்த வகையில் நூலக நிறுவன வலைத் தளத்தில் (www.noolaham.org) பதின்மூவாயிரத்திற்கும் (13000) மேற்பட்ட இதழ்கள், நூல்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள் போன்ற ஆவணங்கள் ஆவணப்படுத்தப்பட்டு பேணிப்பாதுகாக்கப்படுகின்றன. 1833 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரை வெளிவந்த ஆவணங்கள் நூலக நிறுவன இணைய வலைத்தளத்தில் பகிரப்பட்டுள்ளன.

இலக்கிய, சமூக, சமய, கலை, அறிவியல், தொழில்நுட்ப வரலாற்றில் மாணவச் செல்வங்களின் படைப்புக்கள் பெரிதும் பங்காற்றுகின்றது. ஆனால் பாடசாலைகளினால் வெளியிடப்படுகின்ற எழுத்தாவணங்கள் மறுபதிப்பு பெறாததனால் அவை கால ஓட்டத்தில் காணாமற் போய்விடுகின்றன. இதனை நிவர்த்தி செய்யும் பணியினையே நூலக நிறுவனம் ஆற்றி வருகின்றது. அந்த வகையில் யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் எழுத்தாவணங்களையும் நூலக நிறுவனம், ஆவணப்படுத்தப்படுத்தி உள்ளதையிட்டு பெருமகிழ்ச்சியடைகின்றது. இவ்விதழில் யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் ஆவணப் படுத்தப்பட்ட இதழ்கள் தொடர்பான விபரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

எமது இச்செயற்றிட்டம் வெற்றியடைவதற்கு அயராது உழைத்த பாடசாலைசார் பங்காளர் நலன்விரும்பிகள் அனைவருக்கும் நன்றியினைத் தெரிவிப்பதோடு, தொடர்ந்தும் இவர்களது பங்களிப்பினை எதிர்பார்ப்பதோடு இந்நிகழ்ச்சித் திட்டமும் அதுசார்ந்த நிகழ்வுகளும் இனிதே நடைபெற நூலக நிறுவனம் சார்பாக வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

நன்றி

**உமாதரன் சிவதாஸ்,**
இணைப்பாளர், நிகழ்ச்சித்திட்டதன்னார்வ அணி,
நூலக நிறுவனம்.

# வேண்டுகோள்

நீண்ட கலாசார, பாரம்பரிய, பண்பாட்டு அம்சங்கள் தன்னகத்தே கொண்டுள்ள இலங்கை தமிழ் பேசும் சமூகங்கள் மிக நீண்ட காலமாக நிறுவனமயப்படுத்தப்பட்ட பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருகின்றன. உதாரணமாக முற்காலத்தில் விவசாயத்தில் ஒருங்கிணைந்து செயற்பட்டு வெற்றிகரமான அறுவடையை மேற்கொண்டவர்கள் தொடர்ந்து விவசாய உற்பத்திகளை சந்தைப்படுத்த சங்கங்களை நிறுவினார்கள். இவ்வாறு இவர்களின் நிறுவனமயப்படுத்தல் செயற்பாடு அனைத்துத் துறைகளிலும் அனைத்து செயற்பாடுகளிலும் தாக்கம் செலுத்தி நிற்கின்றது.

இவ்வாறு தமிழ் பேசும் சமூகங்களின் நிறுவனமயப்படுத்தப்பட்ட செயற்பாடுகளில் சில உதாரணங்களாக கல்வி நிறுவனங்கள், தமிழ் நூலகங்கள், வழிபாட்டுத்தலம்சார் நிறுவனங்கள், சனசமூக நிலையங்கள், வாழ்வாதாரம் சார் நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள் மற்றும் பல இதர நிறுவனங்களின் செயற்பாடுகளைக் கூறலாம்.

கல்வி நிறுவனங்கள் எனும் பிரிவுக்குள் "யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையை ஆவணப்படுத்தல்" எனும் இச்செயற்திட்டம் உள்ளடக்கப்படுகின்றது. இச்செயற்திட்டம் பின்வரும் உப பகுதிகளை உள்ளடக்கி இருக்கின்றது.

1. நூல்கள், எழுத்தாவணங்கள், பாடசாலைசார் கையெழுத்துப் பிரதிகள், ஓலைச்சுவடிகள், கையேடுகள் போன்றவற்றை எண்ணிமப் படுத்தல்.
2. புகைப்படங்களை எண்ணிமபடுத்தல்; பாடசாலை சார் புகைப்படங்களை ஆவணப்படுத்தல்.

ஆராய்ச்சியாளர்கள் மூலம் யாழ்/வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையின் வரலாற்றையும், வளர்ச்சிப்போக்கையும் முன்னாள் அதிபர்கள், ஆசிரியர்கள், பழைய மாணவர்களின் உதவியோடு ஆராய்ந்து ஆவணப்படுத்தல்.

இம்முயற்சி முழுமை பெறவேண்டுமாயின் இதுவரை காலமும் வெளியான எல்லா இதழ்களும் ஆவணப்படுத்தப்படுவதுடன் மேற் கூறப்பட்ட உப பகுதிகள் யாவும் நிறைவு செய்யப்பட வேண்டும். இச் சிறு நூலில் நூலக நிறுவனம் ஆவணப்படுத்தியுள்ள யாழ்/ வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலை தொடர்பான ஆவண விபரங்களை தொகுத்துள் ளோம். இந்நூலைப் பயன்படுத்தி இதுவரையில் ஆவணப்படுத்தப் படாதுள்ள அனைத்து இதழ்களையும் ஆவணப்படுத்த உதவுவதுடன் ஏனைய உப பகுதிகளை நிறைவு செய்வதற்கும் முன்வருமாறு உங்கள் ஒவ்வொருவரையும் அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

நன்றி

**நூலக நிறுவனம்,**
*#7, 57 ஆவது ஒழுங்கை,*
*கொழும்பு - 06*
*தொலைபேசி இலக்கம் +94112363261*

**பழைய மாணவிகள் சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**
*யாழ்/வேம்படி உயர்தர பாடசாலை*
*தொலைபேசி இலக்கம்: +94 774455899*

நூலக நிறுவனத்தினால் எண்ணிம ஆவணப்படுத்தப்பட்டுள்ள
யாழ்/ வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை ஆவணங்களின் விபரம்

| No. | Name | Year | Author |
|---|---|---|---|
| 1 | The Torch Bearer | 1956 | |
| 2 | The Torch Bearer | 1959 | |
| 3 | The Torch Bearer | 1961 | |
| 4 | The Torch Bearer | 1965-1966 | |
| 5 | The Torch Bearer | 1968-1969 | |
| 6 | The Torch Bearer | 1970 | |
| 7 | The Torch Bearer | 1971 | |
| 8 | The Torch Bearer | 1972 | |
| 9 | The Torch Bearer | 1973 | |
| 10 | The Torch Bearer | 1975 | |
| 11 | The Torch Bearer | 1976 | |
| 12 | The Torch Bearer-Vembadi Girls' High School Jaffna 150th Anniversary | 1988 | |
| 13 | The Torch Bearer | 2000 | |
| 14 | The Torch Bearer | 2001-2002 | |
| 15 | The Torch Bearer | 2003-2004 | |
| 16 | The Torch Bearer | 2007 | |
| 17 | The Beacon (175th Anniversary) | 2013 | |
| 18 | Maths... I Feel It! Activity Book 1 (Grade 6) | 2004 | Mrs. R. Muthukumaran |
| 19 | Maths... I Feel It! Activity Book 2 (Grade 6) | 2004 | |
| 20 | Constitution | 2008 | |

| No. | Name | Year | Author |
|---|---|---|---|
| 21 | Central Vembadi: Annual Dinner Dance | 2002 | |
| 22 | Rememberence Day of Miss. Mabel Thambiah | 1989 | |
| 23 | Annual General Meeting | 1995 | |
| 24 | Annual General Meeting | 2002 | |
| 25 | Annual General Meeting | 2004 | |
| 26 | Annual General Meeting | 2007 | |
| 27 | Annual Sessions | 1993 | |
| 28 | Annual Dinner Dance & A.G.M | | |
| 29 | Vembadi: 20th Anniversary | 2005 | |
| 30 | Vembadi Old Girls Association UK:25th Anniversary | | |
| 31 | Vempadi Girls' High School Magazine (120th Anniversary) | | |
| 32 | Vempadi-OGA-UK | 2001 | |
| 33 | Vempadi | 2001 | |
| 34 | Vempu Tree | 2002 | |
| 35 | Vembadi Night | 2012 | |
| 36 | Prize Day | 1995 | |
| 37 | Activity book for A/L | | |
| 38 | வேம்பு | *2011* | யோ .நிருஷா |
| 39 | வர்த்தகி | *1994-1995* | S. காயத்திரி, S. மதுரிக்கா, A. மதிவதனி, V.எழினி |
| 40 | வர்த்தகி | *2003-2004* | S. சன்மினி |
| 41 | வர்த்தகி | *2008* | ச.துஷித்தா |
| 42 | வர்த்தகி | *2010* | றே.க.கபிரியேலாசெபஸ்ரினி, கி.ஆர்த்திக்கா |
| 43 | துடிப்பு | *2000* | ச. சுஜிதா, சி.சிவரஞ்சனி, ம.கஜப்பிரியா, இ.டாருணி |
| 44 | துடிப்பு | *2009* | தனுஜாதர்மேந்திரன், தர்சிகா சிவனேசன், சுமத்திராநாதன் |

| No. | Name | Year | Author |
|---|---|---|---|
| 45 | அதிபர் அறிக்கை | 2000 | |
| 46 | அதிபர் அறிக்கை | 2001 | |
| 47 | அதிபர் அறிக்கை | 2002 | |
| 48 | அதிபர் அறிக்கை | 2007 | |
| 49 | அதிபர் அறிக்கை | 2009 | |
| 50 | அதிபர் அறிக்கை | 2010 | |
| 51 | அதிபர் அறிக்கை | 2011 | |
| 52 | அரும்பு | 1998 | |
| 53 | அரும்பு | 1999 | மைத்ரேயி சபாநந்தன், சுபாஷினி நச்சினார்க்கினியன் |
| 54 | அரும்பு | 2001 | விஞ்ஞான மன்றம் |
| 55 | அரும்பு | 2002 | |
| 56 | அரும்பு | 2003 | |
| 57 | அரும்பு | 2005 | நீதிமப்பிரியா, தர்மலிங்கம், பவித்ரா சதானந்தசர்மா |
| 58 | அரும்பு | 2005 & 2006 | செ. மதுராந்தகா, யோ.அபிராமி |
| 59 | அரும்பு | 2007 & 2008 | |
| 60 | அரும்பு | 2009 | தரங்கினி இரவீந்திரராஜா விஜேந்தினி சிறீஸ்கந்தராஜா |
| 61 | அரும்பு | 2009&2010 | கோ.லதா, இ.சாஜிபானு |
| 62 | அரும்பு | 2011&2012 | சரண்யா நவராசா, கீர்த்தனா கந்தசாமி |
| 63 | அரும்பு | 2013 | |
| 64 | வருடாந்த பரிசளிப்பு விழா | 1997 | |
| 65 | வருடாந்த பரிசளிப்பு விழா | 1998 | |
| 66 | பரிசளிப்பு விழா | 1983 | |
| 67 | பரிசளிப்பு விழா | 2005 | |
| 68 | பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் நினைவுநாளும் | 2004 | |
| 69 | பரிசளிப்பு விழாவும் நிறுவுனர் நினைவுநாளும் | 2006 | |
| 70 | இயல் (கவிதை) | | |
| 71 | யாழ்நகரின் கல்விக்கருவூலம் வேம்படி ஒருநூற்றாண்டு வரலாறு | 1988 | |
| 72 | பொன்கமலம் | 2011 | |
| 73 | உந்தூழ் | 2011 | |

# நூலகம் வலைத்தளம்

நூலக வலைத்தளத்தில் (www.noolaham.org) 2014 பெப்ரவரி மாதம் வரை நூல்விபரப்பதிவு செய்யப்பட்டுள்ள வெளியீடுகளின் விபரம் வருமாறு :

| | |
|---|---|
| மொத்தப்பதிவுகள் | 13174 |
| நூல்கள் | 3957 |
| இதழ்கள் | 5783 |
| பத்திரிகைகள் | 1987 |
| ஏனையவை | 1449 |

இந்தப் பதிவு தொடர்பான பகுப்புக்களின் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| இதழ்த்தலைப்புகள் | 511 |
| பத்திரிகைத் தலைப்புகள் | 30 |
| எழுத்தாளர்கள் | 2221 |
| வெளியீட்டு ஆண்டுகள் | 110 |

## நூலகம் வலைத்தள மைல்கற்கள்

நூலகவலைத்தளம் இந்திய மொழி எண்ணிம நூலகங்களில் முக்கியமானதொன்றாகும். 2005 இல் ஆரம்பிக்கப்பட்ட இந்த எண்ணிம நூலகம் 13000 இற்கும் அதிகமான இலங்கைத் தமிழ் ஆவணங்களைக் கொண்டதாக வளர்ச்சியடைந்துள்ளது.

| | | | |
|---|---|---|---|
| 100 | ஆவணங்கள் | டிசம்பர் | 2005 |
| 500 | ஆவணங்கள் | டிசம்பர் | 2009 |
| 10000 | ஆவணங்கள் | நவம்பர் | 2011 |
| 13174 | ஆவணங்கள் | செப்டெம்பர் | 2013 |

இலங்கைத்தமிழ் ஆவணங்கள் அல்லாத சுமார் 600இற்கும் அதிகமான மின்னூல்கள் பற்றிய விபரங்கள் அயலகம் எனும் பகுதியில் சேகரிக்கப்பட்டுள்ளன. மேலும் ஏறத்தாழ 3000 நிறுவனங்கள், வலைத்தளங்கள் தொடர்பான தரவுகளும் சேகரிக்கப்பட்டுள்ளன.

**நூலகத்தின் செயற்றிட்டங்கள் சில...**

இலங்கைத் தமிழ்பேசும் சமூகம் தொடர்பான எழுத்தாவணங்கள் ஆவணப்படுத்தல் மட்டுமன்றி பல்வேறு வகையான செயற்றிட்டங்களையும் நூலக நிறுவனம் முன்னெடுத்து வருகின்றது. அந்தவகையில் பள்ளிக்கூட மாணவர்கள் பயன்பெறும் வகையில் மாதிரி வினாத்தாள்கள், கடந்தகால வினாத்தாள்கள் போன்றவற்றை "பள்ளிக்கூடம்" செயற்றிட்டத்தினூடாக மெய்நிகர் இணையத்தளத்தில் இலகுவாகப் பெற்றுக் கொள்ளும் வகையில் வசதிகளை உருவாக்கியுள்ளது.

அத்தோடு-"கையெழுத்துப் பிரதிகள் ஆவணப்படுத்தல்" (Manuscripts Archive) எனும் செயற்றிட்டத்தினூடாகக் கையினால் எழுதப்பட்ட ஆவணங்களை ஆவணப்படுத்தும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது. அந்த வகையில் முதற்கட்டமாக ஓலைச்சுவடிகளை (Ola leaf) ஆவணப்படுத்தல் நடவடிக்கைகளிலும் நூலக நிறுவனம் செயற்பட்டு வருகின்றது.

# நூலக நிறுவனம், வரலாற்றுச் சுருக்கம்

| | |
|---|---|
| *நூலகத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது* | *2005* |
| *நிதி பயன்படுத்திய முதற் செயற்திட்டம்* | *2006* |
| *முதல் நிதிச் சேகரிப்புச் செயற்பாடு* | *2007* |
| *முதல் இணைந்த செயற்திட்டம்* | *2007* |
| *நூலக நிறுவன அமைப்பு* | *2008* |
| *அலுவலர்கள் இணைக்கப்பட்டனர்* | *2009* |
| *முதலாவது ஆண்டறிக்கை (2008 இற்கானது)* | *2009* |
| *நூலக நிறுவன வலைத்தளம்* | *2010* |
| *நூலக நிறுவனம் பதிவு செய்யப்பட்டது* | *2010* |
| *செய்திமடல் ஆரம்பிக்கப்பட்டது* | *2011* |
| *யாழ் பொது நூலகத்தில் புதிய கிளை* | *2011* |
| *முதலாவது வியூகத் திட்டமிடல்* | *2011* |
| *தனியான அலுவலகம்* | *2012* |
| *7ஆவது ஆண்டு விழா* | *2012* |
| *பள்ளிக்கூடம் செயற்திட்டம்* | *2012* |
| *தமிழ் ஆவணப்படுத்தல் மாநாடு 2013* | *2013* |
| *நிறுவன ஆவணப்படுத்தல் செயற்திட்டம்* | *2013* |
| *பள்ளிக்கூடம் செயற்திட்டத்திற்கான புதிய அலுவலகம்* | *2013* |
| *9ஆவது ஆண்டு விழா* | *2014* |

நூலக நிறுவனத்தினைத் தொடர்பு கொள்ள

Noolaham Foundation

No.7, 57th Lane,

Colombo - 06

Telephone

+94 112 363261

Email

noolahamfoundation@gmail.com

Digital Library

www.noolaham.org

Homepage

www.noolahamfoundation.org